ஆகிய இரு ஊர்களுக்கும் விரிவு படுத்தப்படும். இத்திட்டத்திற்கான எல்லா வேலைகளுக்கும் தொழில் நுட்ப ஒப்புதல் அளிக்கப்பட்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவர் அவர்களே, இந்தப் பணி எப்பொழுது முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது? ஒரு நாளைக்கு எவ்வளவு தண்ணீர் கிடைக்க வழிவகை செய்யப்பட்டிருக்கிறது என்பதை அறியலாமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, ஒவ்வொரு பணியாக, தனித்தனியாகப் பிரிக்கப்பட்டு, பணிகள் பல கட்டத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. தலைப்பிடப் பணிகள் வேலை துவக்கப்பட்டு, வடிகிணறு 5.75 மீட்டர் ஆழத்திற்கு இறக்கப்பட்டு, மேற்கொண்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன. நீர்த்தேக்கத் தொட்டி பகிர்மான குழாய்கள் அமைக்கும் வேலைகளுக்கான திட்ட மதிப்பீடு ரூ. 13.34 லட்சத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. பகிர்மான குழாய்கள் அமைக்கும் வேலைகள் 97 சதவிகிதம் முடிவடைந்துள்ளன. இன்னும் ஒரு சிறு பகுதிதான் முடிவடைய வேண்டும். நீரேற்றுக் குழாய் வேலை வருகிற ஆண்டில் பெருமளவு முடிந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதில் எவ்வளவு தண்ணீர் வழங்குவது என்ற புள்ளிவிவரம் இப்பொழுது என்னிடம் இல்லை.

*** 157 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொன்மலை நகரப் பகுதிகளுக்கு குடிநீர் வழங்கப்படுவதற்கான திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** (அ) ஆம்.

(இ) பொன்மலை நகராட்சி, ஆலத்தூர் பேரூராட்சி மற்றும் வழியிலேயுள்ள கிராமங்களுக்கும் சேர்த்து ஒரு கூட்டுக் குடிநீர் திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் தயாரிக்கப்பட்டு அரசின் ஆய்வில் உள்ளது. இத்திட்டத்தில் அமைப்புச் செலவு ரூ. 87,50,000 எனவும் பராமரிப்புச் செலவு ரூ. 2,95,000 எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

1974 சனவரி 25]

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** தலைவர் அவர்களே, பொன்மலை நகராட்சி ஆய்வுச் செலவிற்காக எவ்வளவு ரூபாய் கட்டியுள்ளது? இந்தப் பணி எப்பொழுது துவங்கும் என்று அறியலாமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, ஆய்வுச் செலவு ரூ. 24,500 ஆகும் என்று மதிப்பீடு செய்யப்பட்டது. அந்தப் பணம் கட்டப்பட்டிருக்கும் என்று நான் எதிர்பார்க்கிறேன். இது இன்னும் அரசின் பரிசீலனையில் இருக்கிறது. ஆய்வுக்குப் பின்னர் ஆகும் செலவு தொகையை எப்படி எப்படி வழங்குவது என்பதை பேரூராட்சி மன்றம் முடிவு செய்ய வேண்டும். இந்தத் தண்ணீர் திட்டத்தினால் இடையிலே பயன் பெறுகிற ஊராட்சிகள் திட்டச் செலவில் ஒரு பங்கினையும் பராமரிப்புச் செலவில் ஒரு பங்கினையும் ஏற்றுக்கொள்வதாகத் தீர்மானம் போட்டுத் தரவேண்டும் என்ற முறைப்படி அந்தத் தீர்மானங்கள் அனுப்பப்பட்டுள்ளன. ஒன்றிரண்டு இடங்களில் மட்டும் இந்தத் திட்டத்தை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. ஏற்றுக் கொள்ளாத பகுதி தவிர, ஏற்றுக்கொண்ட பகுதிக்கு நிறைவேற்றுவதற்கான நிதி நிலை வசதி வாய்ப்புக்கூறுகளுக்கு ஏற்ப இவை விரைவுபடுத்தப்படும்.

**திரு. கு. காமாட்சி:** தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தில் ஆலத்தூர் பஞ்சாயத்தும் மேலக்கற்கொண்டார் கோட்டை பஞ்சாயத்தும் தனியாக எங்களுக்கு அந்தத் திட்டம் கொடுக்க வேண்டும் என்று கோரிக்கை ஏதாவது அனுப்பியிருக்கிறதா? அது பற்றி அரசு ஏதாவது பரிசீலனை செய்திருக்கிறதா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, ஆலத்தூர் பேரூராட்சி, பொன்மலை நகராட்சி ஆகிய இரண்டும் இந்தக் குடிநீர் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான பங்குச் செலவைத் தருவதாக ஆமோதித்துத் தீர்மானங்கள் அனுப்பி யுள்ளன. ஆகவே, இக்கேள்வி எழவில்லை.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** தலைவர் அவர்களே, நகரப் பகுதிக்கும் கிராமப் பகுதிகளுக்கும் குடிநீர் வழங்குவது அரசின் கொள்கையாகும். ஆகவே, ஆய்வுக்கு ஏற்படுகின்ற செலவில் பாதித் தொகையை அரசு ஏற்றுக்கொள்வதுகுறித்து மறுபரிசீலனை செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** ஏன் முழுச் செலவையும் ஏற்றுக்கொள்ளக் கூடாது? என்று கேட்டால்தான் பொருத்தமாக இருக்குமே தவிர, ஆய்வுச் செலவை மட்டும் ஏற்றுக்கொள்ளுங்கள் என்று கேட்பது அவ்வளவு பொருத்தமாக இருக்காது. மூக்கணாங் கயிறு செலவையா அரசு ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று கேட்பது? மாடு வாங்குவதற்கு ஆகும் செலவை ஏன் அரசு ஏற்றுக்கொள்ளக்கூடாது? என்று கேட்பதுதான் பொருத்தமாக இருக்கும்.

*158 **வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) மணப்பாறை நகருக்கு காவிரியிலிருந்து குடிதண்ணீர் கொண்டு வரவேண்டும் என மாவட்ட வளர்ச்சி மன்றம் பரிந்துரை செய்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அரசு அதன் மீது என்ன முடிவு எடுத்துள்ளது ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** (அ) இல்லை.

(இ) இக்கேள்வி எழவில்லை.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** தலைவர் அவர்களே, திருச்சியில் உள்ள மாவட்ட வளர்ச்சி மன்றம் ஒரு தீர்மானம் நிறைவேற்றி அனுப்பியது. இது எனக்கும் தெரியும். இல்லை என்பதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை. இனிமேலாவது பரிசீலனை செய்து, தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறதா என்பதைக் கண்டுபிடிக்க முடியுமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** காரியம் தான் முக்கியமே தவிர, வீரியம் முக்கியம் அல்ல என்று ஒரு பழமொழி சொல்வார்கள். அதைப்போல, இங்கே கேட்கப்பட்டிருக்கிற கேள்வி "மாவட்ட வளர்ச்சி மன்றம் பரிந்துரை செய்துள்ளதா?" என்பதாகும். பரிந்துரை செய்து அனுப்பியிருந்தால்தான் அரசாங்கத்திற்குத் தெரியும். மாவட்ட ஆட்சியாளரைக் கேட்ட போது, மாவட்ட வளர்ச்சி மன்றத்திலே பரிந்துரை எதும் செய்யப்